கும்பகோணம் ஒன்றியம் -திருவலஞ்சுழி ஊராட்சிமன்றத் தலைவர்
அவர்களின் செயல்முறைநடவடிக்கைகள் பிறப்பிப்பவர்

தலைவர் - திருமதி. திவ்யா காமராஜ் B.Sc., B.Ed., M.S.W.,

எண்- 01/2023-2024 நாள்- 16-02-2024

பொருள் மனைப்பிரிவு-கும்பகோணம் ஊராட்சிஒன்றியம்-திருவலஞ்சுழி ஊராட்சி திருவலஞ்சுழி கிராமம் புல எண்.359/3A9 ல் அமையும் 55972.80 சதுரடி பரப்பு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர்/ உதவி இயக்குநர், மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலக தொழில்நுட்ப அனுமதிவழங்கப்பட்டதின் பேரில் மனைப்பிரிவில் 1 முதல் 25வரை மனைகள் அமைக்க ஒப்புதல் அளித்து ஆணையிடப்படுகிறது.

பார்வை

1) அரசாணைஎண்.71 ஊரகவளர்ச்சித் துறைநாள் 16.06.2003

2) அரசாணைஎண்.181வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி(UD4(1)துறைநாள் 09.12.2020

3) உதவி இயக்குநர் உறுப்பினர் செயலர், கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம் மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம் தஞ்சாவூர் கடித ந.க.எண். 9ZXJGDU8(17462) 2023/TD4/2023/TCP, நாள்- 11-12-2023 திட்ட அனுமதி எண். 98 /2023

4) தானப் பத்திரஎண்.3822/2023

5) திருவலஞ்சுழி ஊராட்சிமன்ற தீர்மான எண் 14 நாள் 16-02-2024

6) ஊர்ாட்சிமன்ற அலுவலக பலவகை ரசீதுஎண்.473425/16-02-2024

7) திரு.S.காசிராஜன்,திரு.P. சிதம்பரநாதன், எண்.10 ஆண்டியப்பர் தெரு கும்பகோணம். கடிதஎண்.02/02/2024

ஆணை-

கும்பகோணம் ஊராட்சிஒன்றியம் திருவலஞ்சுழி ஊராட்சி,

திருவலஞ்சுழி கிராமம் புல எண்.359/3A9 ல் அமையும் 55972.80 சதுரடி பரப்பு இடத்தினை குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இணை இயக்குநர்/உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக தொழில் நுட்பஅனுமதி வழங்கப்பட்டதின் பேரில் மனைப்பிரிவில் 1முதல்25 வரை உள்ள மனைகளுக்கு ஊராட்சிமன்ற தீர்மானத்தின் படி கீழ்கண்ட நிபந்தனைகளின் படி ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1) மனைப்பிரிவின் ஊடே உயர் அழுத்த மின் கோபுர பாதை செல்லுமாயின் அம்மனை வரன்முறை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.

1) மனையிடத்திற்கும், மின்பாதைகளுக்கும் இடையே குறைந்தப்பட்ச இடைவெளி மின்துறை வழிகாட்டுதலின்படி நிலைநிறுத்தப்படல் வேண்டும்.
2) மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறு இன்றி நீர்நிலைபாதுகாக்கப்படல் வேண்டும்.
3) திட்டசாலையை பாதிக்கும் அனைத்து இனங்களுக்கும் இவ்வுத்தரவு பொருந்தாது.
4) மனைப்பிரிவில் தெருவிளக்குவசதிகள் தொடர்புடைய நிறுவனத்தால் அமைக்கப்படவேண்டும்.
5) மனைப்பிரிவின் சாலைகள் தொடர்புடைய நிறுவனத்தால் தார்சாலை அமைக்கப்படவேண்டும்.
6) மனைப்பிரிவின் ஒருபகுதியில் பலன்தரும் மரங்கள் தொடர்புடைய நிறுவனத்தால் அமைக்கப்படவேண்டும்.
7) சாலையின் ஓரத்தில் கழிவுநீர் சாக்கடை அமைக்க இடம் ஒதுக்கி வீடு கட்டபடவேண்டும்.
8) இடத்தின் உரிமையாளர் உறிஞ்சும் குழிஅமைத்து அதில் கழிவு நீர் இணைக்கவேண்டும்.
9) வீடு கட்டும் போது உள்ளாட்சி அமைப்பில் உரிய நீலவரைபடம் அனுமதிபெறப்படவேண்டும்.
10) மனைப்பிரிவு அமைக்க கொடுக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை என தெரியவரும் பட்சத்தில் மனைப்பிரிவு அனுமதி ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்.

தலைவர்
திருவலஞ்சுழி ஊராட்சி